**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**<u>ஆணை நாள்: 30.09.2019 ((முற்பகல்)</u>**
**<u>மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.</u>**

**<u>முன்னிலை</u>**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**<u>வழக்கு எண்.SA 27/E/2019</u>**

திரு ச.சவரிமுத்து ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காளையார்கோவில்,
சிவகங்கை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 25.06.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 30.11.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 28.12.2018 |

******

**<u>ஆணை</u>**

இன்று (30.09.2019) முற்பகலில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு ச.சவரிமுத்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு I.பாரதி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம் ஆஜரானார்.

2.	மேல்முறையீட்டாளர் 25.06.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், நெடுங்குளம் குரூப், கல்லுவழி கிராமம் புல எண்கள்.266/6பி1 மற்றும் 266/6பி3 ஆகியவை யு.டி.ஆர். திட்டக் காலத்தில் யார் பெயரில் பதிவாகியுள்ளது, அவருடைய பெயர், பட்டா எண்., விஸ்தீரணம், யு.டி.ஆர். திட்டத்திற்குப் பிறகு எந்தத் தேதியில் யார் பெயருக்கு, எதனடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது, பட்டா மாற்றம் செய்ய மனு செய்தவர் யார், என்ன புரசீடிங்ஸ் பின்பற்றப்பட்டது, விசாரணை மேற்கொண்ட அதிகாரி மற்றும் உத்திரவு போட்ட அதிகாரி யார், பட்டா மாற்றம் செய்வதற்கு வேறு ஏதாவது தஸ்தாவேஜுகள் தாக்கல் செய்யப்பட்டதா, யு.டி.ஆர். திட்டக் காலத்திற்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட நபருக்குப் பட்டா மாற்றம் செய்யப்பட்டிருப்பின் அவருடைய பட்டா எண். மற்றும் பட்டாதாரரின் பெயர் என்ன, எத்தனை நபர்கள் மீது பட்டா மாற்றம் செய்யப்பட்டது, யார், யார் பெயருக்கு எந்தெந்த தேதியில், என்ன காரணத்திற்காகப் பட்டா மாற்றம் செய்யப்பட்டது, தற்போது யார் பெயரில் மேற்படி சொத்து பதிவாகி உள்ளது, எத்தனை வருடங்களாக அந்த பட்டாவின் அடிப்படையில் ரசீது போடப்பட்டுள்ளது, மேற்படி சொத்து தற்போது யார் அனுபவத்தில் உள்ளது என 6 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3.	பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 30.11.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவைப் பொதுத் தகவல் அதிகாரி, வட்டாட்சியர் அலுவலகம், காளையார்கோவில் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தருமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 28.12.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (30.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4.	இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5.	இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 24.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6.	விசாரணையின்போது மேல்முறையீட்டாளர் முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்று தெரிவித்ததை ஆணையம் பதிவு செய்து, மேற்படி பட்டா

சம்பந்தமான ஆவணம் தங்களது அலுவலகப் பராமரிப்பிலிருந்தால், மேல்முறையீட்டாளருக்கு மேற்படி தகவல் வழங்கப்பட வேண்டுமென்று ஆணையம் தீர்மானித்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

> **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள 25.06.2018 தேதியிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள பட்டா மாற்றம் தொடர்பான கோப்பினைத் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 2(j)-ன்படி மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு ஆஜர்படுத்தி, ஆய்வு செய்தபின்னர் தனக்குத் தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோரும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி வழங்குமாறும், மேற்படி கோப்பு தங்களது அலுவலகத்தில் இல்லையென்றால், அது குறித்த தகவலையும் வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.டுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 27/E/2019</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காளையார்கோவில்,
சிவகங்கை மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**
திரு ச.சவரிமுத்து,
த/பெ. சந்தியாகு,
கல்லுவழி கிராமம்,
பள்ளித்தும்மம் (அஞ்சல்),
காளையார்கோவில் (வழி),
சிவகங்கை மாவட்டம் - 630 551.

Copy to: Judgement File.
04/10/19